டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 24.9.2024 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 082 - Madurai | Online Edition

# மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் 100 நாள் இலக்கை எட்டியது

புது தில்லி, செப்.23

மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் தில்லி ஐஐடி-யில் ஜூலை 29-ந் தேதி Ideas4LiFE இணையதளத்தை தொடங்கி வைத்தார். சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கை முறைகள் தொடர்பான நடைமுறை மாற்றங்கள் குறித்த ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

யுனிசெப், யுவா ஆகியவற்றின் கூட்டாண்மையுடன் இந்த இணையதளம் உருவாக்கப்பட்டது. ஆன்-லைன் மூலம் பங்கேற்பவர்கள் தங்களது ஆலோசனைகளையும், கருத்துக் களையும் தெரிவிக்க அனுமதிக்கப்படுவார்கள். லைப் இயக்கத்தின் 7 கருப்பொருள்கள் குறித்த சிறந்த யோசனைக்கு பரிசுகள் வழங்கப்படும். மகாராஷ்டிர மாநில சுற்றுச்சூழல் துறை உடன் இணைந்து பம்பாய் ஐஐடியில் கடந்த ஆகஸ்ட் மாதம் 31-ந் தேதி புதுமையான சுற்றுச்சூழல் தீர்வுகளை வரவேற்பதை நோக்க மாக கொண்டு நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் பூபேந்தர் யாதவ் ஆலோசனை களை சமர்ப்பிக்க செப்டம்பர் 15-லிருந்து அக்டோபர் 15 வரை அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

அமைச்சகத்தின் Ideas4LiFE முன்முயற்சிக்கு சமூக ஊடகங்கள் மூலம் இதுவரை 3,300 பதிவுகள் செய்யப் பட்டுள்ளன. சுமார் 1000 ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன.



# மாநில அளவிலான உழவர் தின விழாவிற்கு சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் விவசாயிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடு

திருச்சி, செப்.23

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சிறுமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. தற்போது,கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், நடத்தும் மாநில அளவிலான உழவர் தினவிழா 2024 வருகின்ற செப்டம்பர் மாதம் 26ம் தேதி முதல் 29ம்தேதி வரை, நான்கு நாட்களுக்கு பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற உள்ளது. ஏறத்தாழ 300 வேளாண் தொழில் நிறுவனங்கள், உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் மற்றும் தொழில் முனைவோர் கண்காட்சி மற்றும் கருத்துக்காட்சி அரங்கம் வைக்க உள்ளார்கள்.

ஏறத்தாழ 40,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்க உள்ளனர். மேலும், இந்நிகழ்ச்சியில் வேளாண்மையின் நவீன கண்டுபிடிப்புகள், இரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள், வேளாண் இடுபொருள்கள் மற்றும் மதிப்புகூட்டப்பட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன.

இந்நிகழ்ச்சிக்கு திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர்களை வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் 200 விவசாயிகளை 3 நாட்களுக்கு (26.09.24 - 100 விவசாயிகள், 27.09.24 - 50 விவசாயிகள் & 28.09.24 - 50 விவசாயிகள்) அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே ஆர்வமுள்ள விவசாயிகள் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் விபரங்களுக்கு 0431-2962854, 82484 85377, 88381 26730, 85088 35287, 91717 17832 என்ற எண்ணை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். மேற்கண்ட தகவல் களை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப் பாளர் முனைவர் சி.ராஜாபாபு (91717 17832) தெரிவிக்கிறார்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் ரிலையன்ஸ் உயிர் சக்தி நிறுவனம் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்



கோயம்புத்தூர், செப்.23

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், ரிலையன்ஸ் உயிர் சக்தி நிறுவனத்துடன் 20.09.24 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தியது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் இரா.தமிழ்வேந்தன், முன்னிலையில் உயிர் சக்தி உற்பத்திக் கான தீவனப் பயிர்களை அடையாளம் காண்பதற்காக கையொப்பமானது.

இன்றைய சூழலில், உயிர் சக்தி ஆற்றலுக்கான தேவை அதிகரித்துள்ளது. மேலும், இந்த தேவையை பூர்த்தி செய்வதற்கு அதிக தாவர உற்பத்தி திறன் மற்றும் புதுபிக்கத்தக்க வளங்கள் கொண்ட தீவனப் பயிர்கள் உகந்ததாகக் கருதப்படுகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பயிர் இனப் பெருக்கம் மற்றும் மரபியல் மையத்தின் கீழ் இயங்கும் தீவனப் பயிர் துறையின் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்ட தீவனப் பயிர் இரகங்கள் அதிக தாவர உற்பத்தி திறன் கொண்டவை. அதிக கரிமப்பொருள் மற்றும் அதிக தாவர உற்பத்தி திறன் கொண்ட கம்பு நேப்பியர் புல், உயிர் சக்தி உற்பத்திக்கு சிறந்த மூலபொருள் ஆகும்.

முனைவர் இரா.தமிழ்வேந்தன், பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பாகவும், ரிலையன்ஸ் உயிர் சக்தி நிறுவனத்தின் சார்பாக பசீர் அகமது சிராசி, முதன்மை செயல் அலுவலர், ஆர்.பி.இ.எல், மும்பை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். பயிர் இனப் பெருக்கம் மற்றும் மரபியல் மைய இயக்குனர் முனைவர் ஆர்.இரவிகேசவன், தீவனப் பயிர் துறை பேராசிரியர் மற்றும்

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

தலைவர் முனைவர் ஆர். புஷ்பம், தீவனப் பயிர் துறையின் விஞ்ஞானிகள், ஆர்.பி.இ.எல், ஹைதராபாத் முதன்மை மேலாளர், ஆர்.பி.இ.எல், மும்பை ஜி.ஆனந்தன், பாலாஜி பெருமாள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

உயிர் சக்தி ஆற்றல் உற்பத்திக்கு ஏற்ற தீவனப் பயிர்களை எவ்வாறு பயிர் செய்ய வேண்டும் என்ற தொழில் நுட்பத்தை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், ஆர்.பி.இ.எல் நிறுவனத்திற்கு வழங்கும்.



# நெல்லில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் வெளிவளாக பயிற்சி



கடலூர், செப்.23

நெல்லில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி 21.9.24 அன்று குமராட்சி வட்டாரம், பரிவிளாகம் கிராமத்தில் நடைப்பெற்றது. இப்பயிற்சியில் திட்ட ஒருங்கிணைப் பாளர் முனைவர் க. நடராஜன், வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முக்கிய குறிக்கோள்கள் மற்றும் அதிக மகசூல் தரும் உயர்தர இரகங்கள் பற்றியும், விதை உற்பத்தி செய்யும் முறைகள் பற்றியும் விவசாயிகளுக்கு நெல்லில் காணப்படும் பூச்சி நோய் தாக்குதலும் அதன் மேலாண்மை பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார். முனைவர் மு.பாரதி குமார், இணைப் பேராசிரியர், ஒருங்கிணைந்த பயிர் பராமரிப்பு மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை ஆகியவை விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும் செயல்முறையாகவும் காண்பிக்கப் பட்டது. தவேபக. இணையத்தள செயலிகள் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் முறைகள் பற்றி விளக்கமாக கூறப்பட்டது. தனுக்கா நிறுவனமும் இணைந்து இப்பயிற்சியை நடத்தியது. இறுதியாக விவசாயிகள், வேளாண் விஞ்ஞானிகளிடம் தனது ஐயங்களை கேட்டு தெளிவு பெற்றனர்.

இப்பயிற்சியில் கடலூர் மாவட்ட சேர்ந்த குமராட்சி வட்டாரத்தில் உள்ள பரிவிளாகம் கிராமத்தில் உள்ள முன்னோடி விவசாயிகள் 35க்கும் மேற்பட்டோர் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர். இப்பயிற்சியை அறிவியல் ஆலோசனைக்குழு உறுப்பினர் ரங்கநாயகி ஏற்பாடு செய்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 23.09.2024 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 34 | 56 | காளான் (சிப்பிபட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 30 | 36 | 57 | உருளை (பிற) | 36 | 40 |
| 1B | கத்திரி(Nadu) | 50 | 54 | 57A | உருளை(ஊட்டி) | 48 | 55 |
| 2 | வெண்டை | 25 | 28 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 36 | 40 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 36 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 30 | 34 | 60 | கேரட் | 50 | 56 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 30 | 35 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 40 | 46 |
| 6 | புடலை | 25 | 28 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன் | 28 | 32 | 63 | டர்னிப் | 45 | 50 |
| 8 | சுரைக்காய் | 18 | 22 | 64 | மு.கோஸ் | 16 | 20 |
| 9 | பாகற்காய் | 30 | 35 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 25 | 28 | 66 | காளிபிளவர் | 45 | 50 |
| 11 | பூசணி | 15 | 18 | 67 | பட்டாணி | 190 | 200 |
| 12 | அரசாணி | 12 | 16 | 68 | பூண்டு | 260 | 314 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 30 | 34 | 69 | இஞ்சி | 55 | 136 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 30 | 34 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 44 | 48 | 71 | பென்னி பீன்ஸ் | 55 | 60 |
| 16 | பெ.வெங்காயம் | 46 | 59 | 72 | குடமிளகாய் | 48 | 55 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 22 | 25 | 73 | ஊட்டி அவரை | 120 | 140 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 55 | 74 | பஜ்ஜி மிளகாய் | 40 | 45 |
| 19 | முருங்கை | 60 | 65 | 71A | | | |
| 20 | தேங்காய் | 42 | 45 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 38 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 60 | 65 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 90 | 95 | 75 | எலுமிச்சை | 135 | 144 |
| 25 | சேப்பங்கிழங்கு | 55 | 58 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 38 | 42 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 95 | 98 | 80 | திராட்சை | 80 | 90 |
| 30 | புதினா | 10 | 11 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 45 | 50 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 70 | 75 |
| 40 | கோவக்காய் | 22 | 26 | 91 | பூவன் | 45 | 50 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 16 | 20 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 35 | 96 | நேந்திரன் | 30 | 35 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 22 | 26 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 32 | 38 | | | | |

# வாலாஜா வட்டாரத்தில் வேளாண்மை துறை அதிகாரிகள் மற்றும் விஞ்ஞானிகள் விவசாயிகளுக்கு ஆலோசனை

இராணிப்பேட்டை, செப்.23

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டாரம், கடப்பேரி மற்றும் படியம்பாக்கம் கிராமத்தில் ஆத்மா திட்டதின் கீழ், நெற்பயிர், நிலக்கடலை மற்றும் துவரை சாகுபடி செய்த வயல்களை ஆய்வு மேற்கொள்ளபட்டு, வேளாண்மை உதவி இயக்குனர் திலகவதி தலைமையிலான விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.



ஆதிபராசக்தி வேளாண்மை கல்லூரி, பூச்சியில் துறையின் உதவி பேராசிரியர் மேகா, நெல் மற்றும் துவரை சாகுபடியில் பூச்சி நோய்களை எவ்வாறு கண்டறிதல் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை கூறினார்.

இவ்வாலோசனை குழு கூட்டத்தில் வேளாண்மை துறை திட்டங்களான உணவு மற்றும் ஊட்டசத்து பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் துவரை சாகுபடி செயல் விளக்கம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், மாநில வேளாண் வளர்ச்சி திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், முதல் அமைச்சரின் மண்ணுயிர் கட்டு மன்னுயிர் காப்போம் திட்டம், ஒரு கிராமம் ஒரு பயிர் செயல் விளக்கம், விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

பூச்சி மற்றும் நோய் கட்டுப்படுத்துவதற்கான துண்டு பிரசுரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மேலும் இந்த வயல்வெளி ஆய்வில் விவசாயிகளுக்கு பூச்சிகளில் நன்மை செய்யும் பூச்சிகள் மற்றும் தீமை செய்யும் பூச்சிகளை எவ்வாறு அறிவது என்பது பற்றிய தெளிவான செயல் விளக்கமும் வழங்கப்பட்டது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நலமான சூழலில் வளமான பயிர் வளர்த்து நஞ்சில்லா உணவளிக்க மதுக்கூர் வட்டார விவசாயிகளுக்கு தஞ்சை மாவட்ட வேளாண் துணை இயக்குனர் வேண்டுகோள்



தஞ்சாவூர், செப்.23

தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் பாவாஜி கோட்டை கிராமத்தின் தெற்கு மற்றும் வடக்கு பகுதிகளில் நெல் உழவர் வயல்வெளி பள்ளி பயிற்சி 6 வகுப்புகளாக நடத்தப்பட்டது.

இன்றைய தினம் நடைபெற்ற இரண்டு உழவர் வயல்வெளி பள்ளிகளுக்கான இறுதி நாள் வகுப்பில் தஞ்சை மாவட்ட மத்திய திட்ட வேளாண் துணை இயக்குனர் மாலதி கலந்துகொண்டார்.

அதிக அளவிலான பெண் விவசாயிகள் கலந்து கொண்டது மட்டுமின்றி விவசாயிகள் தங்கள் கற்றுக் கொண்ட தொழில் நுட்பங்களை நலமான சூழலில் வளமான பெயரை உருவாக்கி நஞ்சில்லாத உணவை அனைவருக்கும் அளிக்க கேட்டுக் கொண்டார். மேலும் விவசாயிகள் இயற்கையிலேயே கிடைக்கும் பசுவின் சாணம் மற்றும் கோமியத்தை பயன்படுத்தி பயிருக்கு தேவையான உரங்களை தயாரிப்பதோடு பூச்சி விரட்டிகளையும் தயாரித்து பயன்படுத்த கேட்டுக் கொண்டார்.

பசுமையான மாட்டுச்சாணம் எவ்வாறு வீடுகளில் மட்டுமின்றி விவசாயத்திலும் நோய்கள் வருவதை கட்டுப்படுத்த உதவுவதை விளக்கிக் கூறினார். பின் விவசாயிகளுக்கு தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் முன்னுரிமை அடிப்படையில் பதிவு செய்த பாவாஜி கோட்டையை சேர்ந்த 3 விவசாயிகளுக்கு பின்னேர்ப்பு மானிய அடிப்படையில் 16 லிட்டர் விசை தெளிப்பான்களை வழங்கினார்.

பின் மாநில வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 20 விவசாயிகளுக்கு ஜிங்க்சல்பேட் உரத்தினை வழங்கினார். கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 2 அரை ஏக்கருக்கு தலா 5 கிலோ விதம் வரப்பு பயிராக உளுந்து விதைகளை விவசாயிகளுக்கு வழங்கினார்.

பாவாஜி கோட்டை ஊராட்சி மன்ற ஊர் தலைவர் சாமிநாதன் துணை வேளாண்மை அலுவலர் அன்புமணி வேளாண் உதவி அலுவலர் முருகேஷ் அட்மா திட்ட அலுவலர்கள் சுகிர்தா ராஜு மற்றும் அய்யா மணி சிசி திட்ட அலுவலர் ரம்யா ஆகியோர் விவசாயிகளுக்கு நெல் பயிர் சாகுபடி செய்யும் இடங்களில் வரப்பு பயிராக உளுந்து உளுந்து பயிரிடுவதன் முக்கியத்துவம் பற்றி எடுத்து கூறி விவசாயிகளுக்கு வழங்கினார்.

சிரமேல்குடி கிடங்கு மேலாளர் முருக லட்சுமி விவசாயிகள் அனைவரையும் பதிவு செய்தார். தஞ்சை மாவட்ட மூத்த வேளாண் வல்லுநர் பேரவையைச் சேர்ந்த செயலாளர் கலைவாணன் நன்மை தீமை செய்யும் பூச்சிகள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை கீழ குறிச்சி வேளாண் உதவி அலுவலர் முருகேஷ் செய்திருந்தார். வேளாண் உதவி இயக்குனர் திலகவதி பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெற்ற அனைத்து விவசாயிகளுக்கும் வயல் வெளிப்பள்ளி காண கையேடு மற்றும் குறிப்பேடுகளை வழங்கி நன்றி கூறினார்.



# பார்த்தீனியம் களைக்கட்டுப்பாடு

பார்த்தீனியம் மிக மோசமான களைச்செடி. விளைநிலங்களில் பரவி, விவசாயத்துக்கு மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் பார்த்தீனிய செடிகளால் ஏகப்பட்ட பாதிப்புகள் ஏற்படுகின்றன.

எல்லா பருவ காலங்களிலும் எல்லா மண் வகைகளிலும் வளரக்கூடிய தன்மையுடையது. பார்த்தீனியத்தை ஒருங் கிணைந்த களை மேலாண்மை மூலம் கட்டுப்படுத்தலாம்.

ஆவாரை, அடர் ஆவாரை துத்தி, நாய் வேளை, சாமந்தி ஆகிய செடிகளின் விதைகளை மழைக்காலங்களில் விதைக்க வேண்டும். இச்செடியின் அதிக வளர்ச்சி, பார்த்தீனிய செடியை வளர விடாமல் தடுக்கிறது. பார்த்தீனியம் களைகளை அழிக்கும் மெக்சிகன் வண்டுகள் பார்த்தீனியம் மிகுந்த பகுதிகளில் விட




வேண்டும். மேலும் பூங்காக்களிலும், தோட்டங்களிலும், புல்தரைகளிலும் மற்றும் விவசாய நிலங்களிலும் பார்த்தீனி-யத்தை வேரோடு அகற்ற வேண்டும்.

மீண்டும் மீண்டும் பார்த்தீனியம் வளரும் இடங்களில், உடனடியாக கட்டுப்படுத்த அட்ரஸின் (2.5 கிலோ / ஹெக்டேர்) பார்த்தீனியம் முளைப் பதற்கு முன்பும், சாதாரண உப்பு மற்றும் டீப்பால் (200 கிராம் 2 மி.லி டீப்பால் / ஒரு லிட்டர் தண்ணீருக்கு) 2, 4-½ சோடியம் உப்பு அமோனியம் சல்பேட் சோப்பு கரைசல் (10 கிராம் 20 கிராம் 2 மி.லி / ஒரு லிட்டர் தண்ணீருக்கு) மற்றும் மெட்ரி பூசின் சோப்பு கரைசல் (4 கிராம் 2 மி.லி/ ஒரு லிட்டர் தண்ணீருக்கு) போன்ற களைக்கொல்லிகளைப் பார்த்தீனியம் பூக்கும் தருணத்துக்கு முன்பும் பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன் ஒரு அறிக்கையில் கேட்டு கொண்டுள்ளனர்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO
UREA
PLUS
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# பசும்பாலுக்கும் எருமைபாலுக்கும் என்ன வேறுபாடு? தெரியுமா?




முன்பெல்லாம் கிராமப்புறங்களில் நாட்டு பசுக்களும் எருமைகளும் அதிகமாக இருக்கும். எந்த வீட்டிற்கு சென்றாலும் நாம் குடிக்க தண்ணிய கேட்டால் கூட செம்பு நிறைய மோர் கொடுப்பாங்க. படிப்படியாக கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்தாலும் வெண்மை புரட்சியின் விளைவாகவும் கலப்பின பசுகளின் வருகையாலும் இன்று நாம் பால் உற்பத்தியில் முதலிடத்தில் இருக்க சாதகமாக உள்ளது.

பசும்பாலுக்கும் எருமைபாலுக்கும் நம்மில் பலருக்கு வேறுபாடு, வித்தியாசம் தெரியாது. முதலில் மாடுகளின் வித்தியாசங்களை பார்ப்போம்.

**பசு மாடு (COW)**

இது நாட்டு பசு மற்றும் கலப்பின அயல் நாட்டு பசு என இருவகை இருந்தாலும் பால் உற்பத்தியில் அதிக அளவு தருவது கலப்பின வெளி நாட்டு வகை பசுகளே. ஒரு பசு மாடு இருந்தால் 30 ஏக்கர் விவசாயம் செய்யலாம் என சுபாஷ் பாலேக்கர் கூறியுள்ளார். அதனுடைய சாணம், கோமியம் மூலமாக பல்வேறு வகையான இடுபொருள்களை தயாரித்து நிலத்தில் இடலாம். பொதுவாக பசுக்கள் தூய்மையாக இருக்க விரும்பும். அதனுடைய சாணத்தில் கூட உட்காருவதில்லை. பசு மாட்டை 5 கிமீ தொலைவில் விட்டாலும் அது தானாகவே தன்னுடைய இருப் பிடத்திற்கு வந்து சேரும். அதுபோல் அதனுடைய குட்டிகளை (கன்றுகளை) எளிதாக அடையாள காணும்.

**எருமை மாடு (BUFFALO)**

இதில் நாட்டு மாடுகளும் கலப்பின மாடுகளும் உண்டு. இது சேற்றைக் காண்டலே (சகதியில்) படுத்து புரளும். நினை வாற்றல் மிக மிக குறைவு. எருமையை வீட்டை விட்டு 2 கிமீ தூரம் கொண்டு போய் விட்டாலும் அது தானாக வீடு வந்து சேராது. தன்னுடைய கன்றுகளை கூட அடையாள காண முடியாது.

**பால் என்றால் என்ன?**

பொதுவாக எல்லா பாலூட்டிகளில், பால் மடியிலிருந்து அது தன்னுடைய குட்டியை ஈன்ற பிறகு, இயற்கையாகவே சுரக்கும்

திரவமே பாலாகும் (MILK). எந்தவொரு பாலூட்டியாக இருந்தாலும் கூட அதனுடைய பாலில் உள்ள சத்துகள் ஒரே மாதிரியாக தான் இருக்கும்.

**பசும் பாலுக்கும் எருமை பாலுக்கும் உள்ள வேறுபாடுகள் தெரியுமா?**

1) பசும்பால் வெளிர்கலந்த மஞ்சள் நிறத்தில் இருக்கும். இதற்கான காரணமாக இருப்பது கரோட்டின் மற்றும் சாந்தோஃபில் நிறமிகளாகும். ஆனால் எருமை பால் வெண்மை நிறத்தில் இருக்கும்.

2) பசும்பாலை எத்தனை முறை காய்ச்சி குடிச்சாலும் அதிலுள்ள ஊட்டச்சத்துகள் அழியாது. ஆனால் எருமை பாலை அடுப்பில் வைத்து சிறிது சூடாக்கினாலே அதிலுள்ள 3 மற்றும் 4ஆம் நிலையிலுள்ள சத்துகள் ஆவியாகி விடும்.

3) பால்மானி (LACTAMETER) அளவின்படி பார்த்தால் பசும்பால் =26-28 என்றளவிலும், எருமைபால்=29-32 என்ற அளவிலும் ரீடிங் தெரியும். பால்மானியின் அளவு 25 ஐ விட குறைவாக இருந்தால் அந்த பாலில் தண்ணீர் கலந்து இருக்க வாய்ப்புண்டு.

4) பசும்பாலின் ஒப்படர்த்தி = 1.026-1.028 என்றும், எருமைபாலின் ஒப்படர்த்தி 1.029-1.032 என்றும் தெரிய வரும்.

5) பசும்பாலை விட எருமைபாலில் கொழுப்பு சத்து அதிகம். பசும்பாலில் FAT 3-5%, எருமைபாலில் FAT 5-9%. பொதுவாக பாலின் விலை கொழுப்பின் அளவை பொருத்தே நிர்ணயிக்க படுகிறது.

6) பசும்பாலை விட எருமைபாலில் கொலஸ்ட்ரால் அளவு குறைவு. 100 மி.லி என்ற பசும்பாலில் 317-413 MG என்றும் அதே அளவு எருமைபாலில் 235- 248 MG அளவில் இருக்கும்.

7) பசும்பாலில் கரையும் சர்க்கரையின் அளவு அதிகமாகவும் எருமைபாலில் குறைவாகவே உள்ளது.

8) தேநீர் விடுதிகள் போன்ற இடங்களில் அதிகமாக பயன் படுத்துவது பசும்பால் அல்ல. எருமை பாலே. இதில் அதிகமாக தண்ணீர் ஊற்றி தேநீர் தயாரித்தாலும் தேநீர் திக்காகவும் ஸ்டாங்காகவும் (THICK & STRONG) இருக்கும். இதற்கெல்லாம் பசும்பால் சரிபட்டு வாரது. தண்ணியாகவே தேநீர் இருக்கும்.

9) பசுவின் பால் உற்பத்தி காலம் 295 முதல் 305 நாட்களாகும். ஆனால் எருமையின் பால் உற்பத்தி காலம் 260 முதல் 295 நாட்களே.

10) பசுவிடம் கன்றை காட்டி எளிதாக பால் கறந்தாலும் அது கொஞ்ச பாலை கன்றுக்காக மறைத்து வைக்கும். எருமை அப்படி அல்ல. பால் கறப்பது கொஞ்சம் கடினமாக தான் இருக்கும்.

மொத்தத்தில் பார்க்கும்போது பசும்பாலை விட எருமைபால் சிறந்ததாக இருந்தாலும் நம்முடைய பாரம்பரிய பழக்க வழக்கங் களால் பசும்பால் அனைவரின் தேர்வாகவும், முன்னணியில் நிற்கிறது என்பது தான் உண்மையான செய்தியாகும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# மிகச்சன்ன இரக நெல் சாகுபடி மற்றும் நெல் பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பண்ணைப்பள்ளி குறித்த விவசாயிகள் பயிற்சி



சிவகங்கை, செப்.23

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டாரத்தில் வேளாண்மை துறை அட்மா விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் நெல் பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பண்ணைப் பள்ளி குறித்த விவசாயிகள் பயிற்சி கீழடி கிராமத்தில் நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் தங்கப்பாண்டியன் நெல் இரகங்கள் தேர்வு மற்றும்பசுந்தாள் உரங்கள் பயன்பாடுகள் பற்றி கூறினார். ராஜேஷ் வேளாண் விரிவுரையாளர் நெல் பயிரில் விதைநேர்த்தி, பசுந்தாள் உரத்தின் பயன்பாடுகள், வரப்பு பயிர் சாகுபடி, ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாகம் ஓட்டுப் பொறி, விளக்குப்பொறி, இயற்கை எதிரிகளான (தேனீ, பொறி வண்டு, சிலந்தி பயன்கள் பற்றி கூறினார்.

வேளாண்மை அலுவலர் கலைவாணி வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து கூறினார். துணை வேளாண்மை அலுவலர் வரப்பு பயிர் மற்றும் நெல் பயிருக்கு நெல் நுண்ணூட்டத்தின் பயன்பாடுகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

உதவி வேளாண்மை அலுவலர் முத்துப்பிரியா மற்றம் வட்டார தொழில் நுட்ப மேலாளர் சத்யா விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் மூலம் விதைநேர்த்தி செயல்முறை விளக்கம் செய்து காண்பித்தனர். விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். விவசாயிகளுக்கு நெல் சாகுபடி பற்றிய தொழில் நுட்ப கையேடுகள் வழங்கப்பட்டன.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**




பயோ நெமட்டான்

பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?

# பயன்படுத்துவீர்...

# பயோ நெமட்டான்

# "நூற்புழுக்களின் எதிரி"

**இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.**

- அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
- பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
- மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.

வேர் முடிச்சுகள்



வேர் வீக்கம்



வேர் அழுகல்



டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com

84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948 திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935 வேலூர் : 91 93449 14938

# விதை உற்பத்தியில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி



தஞ்சாவூர், செப்.23

தஞ்சாவூர் மாவட்டம், அம்மா பேட்டை வட்டாரத்தில் விதை உற்பத்தி பதிவு செய்யும் விவசாயிகளுக்கு தஞ்சாவூர் மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை மூலம் ஒரு நாள் தொழில் நுட்ப பயிற்சி வடபாதி கிராமத்தில் 20.9.24 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்மாப்பேட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், கோ.மோகன் பயிற்சியினை துவக்கி வைத்து விதைப்பண்ணை விவசாயிகளுக்கு விதை உற்பத்தி மற்றும் விதை சேமிப்பின் முக்கியத்துவம் குறித்தும் நெல் அறுவடைக்கு பிறகு பசுந்தாள் உர பயிர்களை பயிரிட்டு மடக்கி உழவு செய்யும் பழக்கத்தை கடைபிடித்து மண்ணின் வளத்தை மேம்படுத்தி தரமான விதை உற்பத்தி செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டார். விதைப்பண்ணை பதிவு செய்யும் முறைகள் குறித்தும் தேவையான ஆவணங்கள் மற்றும் விதையின் முக்கியத்துவம் குறித்தும் தஞ்சாவூர், விதைச்சான்று அலவலர் ச.சங்கவி விளக்கினார்.

அம்மாப்பேட்டை, விதைச்சான்று அலுவலர் க.பிரபு, விதைப்பண்ணையில் ஒவ்வொரு கட்டத்திலும் கலவன்கள் அற்ற விதைகளை உற்பத்தி செய்ய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தார்.

தஞ்சாவூர், விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் து.கோபாலகிருஷ்ணன், விதைப் பண்ணைகளில் விதை உற்பத்தியினை அதிகரிப்பதற்குண்டான தொழில் நுட்பங்கள் குறிப்பாக களைக்கொல்லிகள் பயன்படுத்தும் முறை, ரசாயன உரங்களை அளவுக்கு அதிகமாக ஈட்டுவதை தவிர்த்து சமச்சீரான உர நிர்வாகம் மற்றும் நுண்ணுயிர் உரங்களை அதிகளவு பயன்படுத்தம் முறை, பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள், அறுவடை மற்றும் அறுவடைக்கு பிறகு மேற்கொள்ளப்பட வேண்டிய தரங்கள் குறித்தும், விதையின் முளைப்புத்திறன் மற்றும் பிற ரக

கலவன்கள் இல்லாமல் விதை உற்பத்தி செய்து விதை உற்பத்தியினை ஒரு இலாபகரமான தொழிலாக மேற்கொள்ளப் பட வேண்டாம் என்று எடுத்துக் கூறினார்.

இந்த பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் உதவி விதை அலுவலர் வி.ஞானசுந்தர் மற்றும் அ.சூரியமூர்த்தி செய்திருந்தார்கள். இப்பயிற்சியில் அம்மாப்பேட்டை வட்டாரத்தைச் சார்ந்த அனைத்து விதைப் பண்ணை விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



# சிறுதானியப் பயிர்கள் சாகுபடி தொழில் நுட்பங்கள் மற்றும் மதிப்பு கூட்டுதல் குறித்த மாநில அளவிலான விவசாயிகள் கண்டுணர் சுற்றுலா




அரியலூர், செப்.23

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில விரிவாக்கத் திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் (அட்மா) சிறுதானியப் பயிர்கள் சாகுபடி தொழில் நுட்பங்கள் மற்றும் மதிப்பு கூட்டி விற்பனை செய்வது குறித்த மாநில அளவிலான விவசாயிகள் கண்டுணர் சுற்றுலாவிற்கு விவசாயிகள் திருவண்ணாமலை மாவட்டம் அத்தியேந்தலில் அமைந்துள்ள சிறுதானியங்கள் மகத்துவ மையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இம்மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் வைத்திலிங்கம் தலைமை வகித்தார். பயிர் பெருக்கம் மற்றும் மரபியல் துறை உதவி பேராசிரியர் வெண்ணிலா சிறு தானியங்கள் சாகுபடியின் அவசியம், அவற்றை உண்பதால் சர்க்கரை மற்றும் நரம்பு சம்பந்தமான நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டு மனித உடலுக்கு ஏற்படும் நன்மைகள் குறித்து விளக்கினார். கம்பு, சோளம், வரகு, பனி வரகு, கேழ்வரகு, தினை, சாமை, குதிரைவாலி போன்ற சிறுதானியங்களின் சாகுபடி பருவம், இரகங்கள் மற்றும் அவற்றின் சிறப்பியல்புகள், வயது, விதையளவு, விதை நேர்த்தி, விதைப்பு, விதைப்பு மேற்கொண்டவுடன் தவறாமல் நீர்ப்பாசனம் அளிப்பது ஆகிய தொழில் நுட்பங்களையும் சிறு தானியங்களுக்கு நீர்த்தேவை மிகக் குறைவு என்பதால் மானாவாரி முறையில் குறைந்த செலவில் சாகுபடி மேற் கொள்ளலாம் எனவும் களை நிர்வாக முறைகள் குறித்தும் விளக்கினார். சிறுதானியப் பயிர்கள் சாகுபடியில் உயிர் உரங்கள், நுண்சத்து இடுவதால் தரமான தானியங்களை உற்பத்தி செய்யலாம் எனவும் சிறு தானியப் பயிர்கள் சாகுபடியில் தேவைப்படும் உரம் மிகக் குறைவு என்றும் பூச்சி நோய் தாக்குதல் மிகக் குறைவாக இருப்பதால் பயிர் பாதுகாப்பு

மருந்துகள் தெளிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது எனவும் இதனால் நஞ்சில்லாத சத்தான சிறு தானியங்களை உணவாக உண்பதால் உடல்நலம் பாதுகாக்கப்பட்டு மக்களின் ஆரோக்கியம் மேம்படுத்தப்படும் எனவும் விளக்கி விவசாயி களுடன் கலந்துரையாடி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார்.

உழவியல் துறை உதவி பேராசிரியர் அப்பாதுரை பல்வேறு சிறுதானியங்களை விதை நேர்த்தி செய்வது, விதைப்பு முறை, நீர் நிர்வாகம் மற்றும் களை நிர்வாக முறைகள் குறித்து விளக்கினார். சிறுதானியப் பயிர்கள் சாகுபடியில் உயிர் உரங்கள், நுண்சத்து இடுவதால் தரமான தானியங்களை உற்பத்தி செய்யலாம் எனவும் விளக்கினார். சிறு தானியங்களை விளைபொருளாக விற்பனை செய்யாமல் சிறுதானிய சத்து மாவு, உருண்டை, முறுக்கு போன்ற பொருட்களாக மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி விற்பனை செய்வதால் விவசாயிகள் கூடுதல் இலாபம் ஈட்டலாம் எனவும் அதற்கென வேளாண் அறிவியல் நிலையங்கள் வழங்கி வரும் பயிற்சிகள் குறித்த விபரங்களையும் விற்பனை வாய்ப்புகள் குறித்தும் விளக்கி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார்.

மக்கள் காய்கறிகளை அன்றாடம் பயன்படுத்தும் போது அதிலுள்ள நச்சுத்தன்மையை நீக்க சிறிதளவு புளி, உப்பு நீர்க்கரைசலை சூடாக்கி அதில் காய்கறிகளை அலசி பின் மீண்டும் நல்ல தண்ணீரில் கழுவி பயன்படுத்த வேண்டும் எனும் ஆரோக்கியக் குறிப்பினையும் தெரிவித்தார்.

பின்னர் விவசாயிகள் மையத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறு தானியங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ள சாகுபடித் திடல்களைப் பார்வையிட்டு சாகுபடி குறித்த தொழில் நுட்பங்களைத் தெரிந்து கொண்டனர். அங்கு அறுவடை மற்றும் பின் அறுவடை நிர்வாகம் குறித்து விளக்கப்பட்டது.

இக்கண்டுணர் சுற்றுலாவிற்கான ஏற்பாடுகளை வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் மீனாட்சி, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் மகேஷ்குமார், ஆரோக்கியராஜ் மற்றும் முன்னோடி விவசாயிகள் செய்திருந்தனர்.

ஜெயங்கொண்டம் மற்றும் ஆண்டிமடம் வட்டார விவசாயிகள், உழவர் நண்பர்கள், பண்ணை மகளிர் இக்கண்டுணர் சுற்றுலாவில் கலந்து கொண்டனர்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# கோயம்புத்தூர் வேளாண்மை பல்கலைக்கழகத்தில்

# புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் பயிற்சி



புதுக்கோட்டை, செப்.23

வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் அட்மா மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 2024-25ஆம் ஆண்டிற்கான முதல் கட்ட நிதி விடுவிப்பில் கோயம் புத்தூர் வேளாண்மை பல்கலைக்கழகத்திற்கு புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து 40 விவசாயிகள் அறுவடை பின்செய் நேர்த்தி மற்றும் எண்ணெய்வித்து பயிர்களில் மதிப்புகூட்டுதல் என்ற தலைப்பில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இப்பயிற்சியில் புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை, திருவரங்குளம், கறம்பக்குடி வட்டாரங்களை சேர்ந்த 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். பயிற்சிக்கு விவசாயிகளை புதுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சு.அன்பரசன் வழி அனுப்பி வைத்தார். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தில் வேளாண் பொறியியல் துறை இணை பேராசிரியர் வி.வீரணன் அருண் அறுவடைக்குப்பின் நேர்த்தி செய்யும் முறைகள் மற்றும் மதிப்புக் கூட்டுதல் தொடர்பான பல்வேறு தொழில்நுட்பங்களை செயல்விளக்கம் மூலம் விவசாயி களுக்கு செய்து காண்பித்து விளக்கமளித்தார்கள். மேலும் ஆர்.கலையரசி உழவியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் எண்ணெய்வித்து பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு வயல்வெளி ஆய்வின் மூலம் விளக்கமளித்தார்.

அதனைத் தொடர்ந்து உழவியல் துறை இணைப்பேராசிரியர் எம்.செந்திவேல் களை மேலாண்மை மற்றும் உர மேலாண்மை தொழில்நுட்பங்கள், நிலக்கடலையில் காய்கள் திறட்சியாக பிடிப்ப தற்கு செய்ய வேண்டிய தொழில்நுட்பங்கள், குறித்து விவசாயி களுக்கு வயல்வெளி ஆய்வின் மூலம் விளக்கமளித்தார் மற்றும் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள ரகங்களின் சிறப்பியல்புகள் குறித்து விளக்கமளித்தார். இப்பயிற்சியினை ஒருங்கிணைத்து புதுக்கோட்டை வட்டார உதவி தொழில்நுட்ப மேலாளர் அருளரசு, உதவி விதை அலுவலர் சாமிநாதன் மற்றும் பயிர் அறுவடை பரிசோதனை பணியாளர் விஜய் ஆகியோர்கள் அழைத்துச் சென்று வந்தனர்.

# இப்கோ – நானோ டி.ஏ.பி

நானோ டி.ஏ.பி திரவ உரத்தில் 8% தழைச்சத்தும் 16% மணிச்சத்தும் உள்ளது. நானோ டி.ஏ.பியைப் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்கையில் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரியத்தன்மை அதிகரிக்கிறது. மேலும், பயிரின் வளர்ச்சி, தரம் மற்றும் மகசூலையும் அதிகரிக்கிறது.

**பயன்படுத்தும் முறை**

ஒரு மூடி நானோ டி.ஏ.பி பாட்டிலின்அளவு= 25 மி. லி

**விதை நேர்த்தி**

ஒரு கிலோ விதைக்கு, 3 – 5 மி.லி. நானோ டி.ஏ.பியைத் தேவையான அளவு நீரில் கலந்து விதையின் மேற்பரப்பில் ஒரு மெல்லிய படலம் போல் உருவாகச் செய்து, 25 முதல் 30 நிமிடம் வரை வைத்து, பின்பு நிழலில் உலர்த்தி விதைப்பு செய்ய வேண்டும்.

- ADVT.




**வேர்/கிழங்கு/கரணை நேர்த்தி**

தேவையான அளவு நீரில் நானோ டி.ஏ.பி திரவத்தை, ஒருலிட்டர் நீருக்கு, 3 -5 மி.லி என்ற அளவில் கலந்து நாற்றுகள்/ கிழங்குகள்/ கரணைகளை 20 - 30 நிமிடம் ஊற வைத்து, பின்பு நிழலில் உலர்த்தி நடவு செய்ய வேண்டும்.

**இலை வழி தெளிப்பு**

2-4 மி.லி நானோ டி.ஏ.பியை ஒரு லிட்டர் நீரில் கலந்து பயிரின் முக்கிய வளர்ச்சி பருவங்களான (கிளைப்பு, துளிர் விடும்) தருவாயில் தெளிக்க வேண்டும். அதிகமாக மணிச்சத்து தேவைப்படும் பயிர்கள் மற்றும் நீண்ட கால பயிர்களுக்கு நானோ டி.ஏ.பியை இரண்டாம் தெளிப்பாக பூக்கும் பருவத்திற்கு முன் தெளிக்கவும்.

- ADVT.

## கொடுமுடி வட்டாரத்தில் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி



ஈரோடு, செப்.23

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டாரத்தில் வேளாண்மை - உழவர் நலத்துறையின், கீழ் செயல்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் இச்சிப்பாளையம் வருவாய் கிராமத்தில் விவசாயிகளுக்கு நீடித்த நிலையான கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் பொறுப்பு மு.ரேகா, தலைமை தாங்கி துவங்கி வைத்தார். பின்னர் ஜெயகுமார், பூச்சியல்துறை ஈ.ஜ.டி பாரி , கரும்பு பயிரில் பூச்சி மேலாண்மை மற்றும் அதனை கட்டுப்படுத்தும் முறை பற்றி விவசாயிகளிடம் தெளிவாக விளக்கி கூறினார். பார்ாடதிபன், இனப்பெருக்கத்துறை, ஈ.ஜ.டி பாரி, கரும்பு பயிரில் புதிய ரகங்கள் மற்றும் முக்கியத்துவம் பற்றி எடுத்து கூறினார். மேலும் சுரேஷ்;, உதவி வேளாண்மை அலுவலர், வேளாண் இடுபொருள்களான உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டங்களின் மானிய விவரங்களையும் தனது துறை சார்ந்த திட்டங்களை எடுத்து கூறினார். இந்த பயிற்சிக்கான ஏற்பா களை பாலகண்ணன், ஈ.ஜ.டி பாரி அலுவலர் மற்றும் அட்மா திட்டப் பணியாளர்கள் செய்திருந்தனர்.

# நெல் மற்றும் மக்காசோளம் பயிருக்கான டிஜிட்டல் பண்ணை பள்ளி விவசாயிகளுடன் கள ஆய்வு - பயிற்சி



விருதுநகர், செப்.23

விருதுநகர் மாவட்டத்திலுள்ள வத்ராப் மற்றும் சிவகாசி வட்டாரத்திலுள்ள குன்னூர் கிருஷ்ணன் கோவில் கு.புதூர் மற்றும் கவுண்டடன்பட்டி பண்ணை பள்ளி விவசாயி களுக்கான சாகுபடி ஆயத்த பயிற்சி ரிலையன்ஸ் பவுண்டேஷனால் கடந்த 20.9.24 அன்று நடை பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட திட்ட மேலாளர் ஸ்ரீகிருபா தனது தலைமை உரையில், புரட்டாசி மாதம் பிறந்தாலே மானாவாரி சாகுபடி தொடங்கிவிடும். ஆனால் இந்தாண்டில் இன்னும் விதை வாங்காத நிலையில் தான் விவசாயிகள் வானத்தை பார்த்தவாறு உள்ளனர். கடுமையான வெப்ப மும் வறட்சியும் இருப்பதால் இறவையை தவிர சாகுபடி இந்த பகுதிகளில்தொடங்க வில்லை என்றார்.

விவசாய நண்பர்களே ...
விவசாயம் சம்பந்தமாக உங்கள் சந்தேகங்களுக்கு...
ரிலையன்ஸ் பவுண்டேசனின்
கட்டணமில்லா உதவி தொலைபேசி எண்ணில் விளக்கம் பெறலாம்
1800-419-8800
Reliance Foundation

பண்ணை பள்ளி விவசாயிகளுக்கான தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கிட தயாராக உள்ளதாக தெரிவித்தார். மேலும் விவசாயிகளுக்கான சாகுபடி பிரச்சனைகளை தீர்வுகாண கிசான் உதவி மையம் என்ற எண்ணில் 18004198800 அழைக்கலாம் என்றார்.

மேலும் இந்த பயிற்சியில் கலந்த கொண்ட வேளாண் வல்லுநர் சந்திர சேகரன் பேசுகையில், மக்காசோளம் மானாவாரியாகவும் இறவையாகவும் சாகுபடி செய்யப்படுகிறது. அடுத்த வாரத்தில் (செப் 27) மழைக்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளதால்

நிலத்தில் ஆட்டு கிடை போன்றவற்றை அமைத்து தரமான விரிய ஒட்டு ரக விதைகளை வாங்கி தயாராக வைத்திருக்க கேட்டுக் கொண்டார். படைபுழு தாக்குதல் வருகின்ற நிலத்தில் ஏக்கருக்கு 80- 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு கடைசி உழவில் போடக் கூறினார்.

படைப்புழு தாக்குதல் தான் மக்காசோள சாகுபடியில் முக்கிய பிரச்சினையாக உள்ளது. அதைவிட தற்போது காட்டு பன்றி தாக்குதலுக்குள்ளான பாதிப்பை கட்டுப்படுத்த வேலிகள், நிலத்தை சுற்றி காண் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டுமென விவசாயிகளிடம் கேட்டுக் கொண்டார்.

முன்னதாக நெல்லுக்கு KCL TREATMENT, மற்றும் விதை நேர்த்தி (விதை அமிர்தம் ஒரு கிலோ விதைக்கு 25 ML) கலந்து செயல்விளக்கம் செய்து காட்டப்பட்டது.




மேற்கண்ட பயிற்சியில் தமிழ்செல்வன் , சண்முக நாதன் சி.ஒ சுந்தர மாக லிங்கம், கருப்பையா, பால்ராஜ் தங்கராஜ் சுந்தர ராஜ் உள்ளிட்ட முன்னோடி உழவர்களும் ராஜீவ் காந்தி கூட லிங்கம் கெங்க அம்மா பாக்கியலட்சுமி பாண்டி லட்சுமி போன்ற மகளிர் உழவர்களும் கலந்து கொண்டனர். முன்னதாக லு.புதூர் விவசாயி அந்தோணி முத்து நிலத்தில் இறவை மக்காசோள பயிருக்கு களைக்கொல்லி அட்ரசின் ஏக்கருக்கு 800 கிராம் தெளிப்பது குறித்து அவரது தோட்டத்தில் விளக்க பட்டது. களைக்கொல்லி தெளிக்க விசறி நாசில்லை கைத் தெளிப்பானில் பயன்படுத்த வேண்டுமாய் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை கள பணியாளர் வேம்புலு மற்றும் மக்காசோள வாட்சாப் குழுவினரும் சிறப்பாக செய்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.